**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | | | |
|---|---|---|---|
| Case No: | | **SPL.S.C.No.20/2024** | |
| Prosecution Witness : | | **LW -1 / PW - 1** | |
| Name : | ராஜேஸ்வரி | Taluk : | |
| S/o. : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **07.11.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் மீன்சுருட்டி ரெட்டிபாளையம் கிராமத்தில் மேற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையர் சாதியை சார்ந்தவர். நான் தற்போது திருச்சி மாத்தூர் ரவுன்டானாவில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் 3 ம் எதிரி தனலெட்சுமி SC வகுப்பை சார்ந்தவர். 4 ம் எதிரி SC வகுப்பை சார்ந்தவர். 1, 2 எதிரிகள் படையாச்சி வகுப்பை சார்ந்தவர்கள். கடந்த 2024 ம் ஆண்டு 1 ம் மாதம் 22 ஆம் தேதி பகல் 12.00 மணியளவில் என்னை மோசமாக பேசினார்கள், அண்ணாதுரை என்னை பற தேவிடியா, இவளை இந்த இடத்தை விட்டு துரத்த வேண்டும் என்று சொல்லி கட்டையால் காலில் அடித்தார். ராஜா எனது கன்னத்தில் அறைந்தார், தேவடியா, குச்சிக்காரி என்று திட்டி உன்னை புலந்துவிடுவேன் என்று சொன்னார். தனலெட்சுமியும் என்னை திட்டிவிட்டு, என் அம்மாவை ஒரே எட்டு உதைத்துவிட்டார், பறதேவிடியா, குச்சிக்காரி என்று சொல்லி என்னையும், என் அம்மாவையும் அடித்து துரத்தவேண்டும் என்று சொன்னார். நான்கு பேரும் ரொம்ப மானமாக காதால் கேட்க முடியாத அளவுக்கு திட்டினார்கள். சத்தம் கேட்டு ராமானுஜம், திரிசங்கு, ராமதாஸ் ஆகியோர்கள் அங்கு வந்து, சண்டையை விலக்கிவிட்டாகள். தனலெட்சுமி குடியிருயிருக்கும் இடம் எனது மாமனார் கொடுத்த

இடம். என் கணவர் சுப்பிரமணியன், என் நாத்தனார் ஆகியோர் அந்த இடத்தில் தான் இருந்தார்கள். எங்களுக்கு 12 செண்ட் இடம், அவர்களுக்கு தனியாக மெத்தை வீட்டோடு 7 செண்ட் இடம் இருந்தது. அந்த இடத்தால் தான் எங்களுக்குள் பிரச்சனை ஆனது. பிறகு ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு ஒரு இருசக்கர வாகனத்தில் போனோம். மருத்துவமனையில் காலிலும், கையிலும் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்து கொண்டோம். மருத்துவமனைக்கு போலீசார்கள் வந்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இது சம்மந்தமாக DSP என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் குடியிருக்கும் ரெட்டிபாளையத்திற்கும் மீன்சுருட்டி காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் **2** கிலோமீட்டர் தூரம் இருக்கும். எங்கள் ஊரில் இருந்து ஜெயங்கொண்டம் எவ்வளவு தூரம் என்றால் எனக்கு அது தெரியவில்லை. எங்கள் ஊரில் இருந்து ஜெயங்கொண்டத்திற்கு இருசக்கர வானத்தில் போனால் எவ்வளவு நேரம் என்றால் அதுவும் தெரியவில்லை, கால் மணி நேரம், அரை மணி நேரம் ஆகலாம். எனக்கும் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக **10, 12** வருடமாக ஜெயங்கொண்டம் நீதிமன்றத்தில் **OS.228/2012** மற்றும் **OS.36/2019** ஆகிய வழக்குகள் நடந்து கொண்டுள்ளது என்றால் சரிதான். நான் ஜெயங்கொண்டம் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு போனேன் என்றால் அது **4** மணி இருக்கும். எங்கள் ஊருக்கு ஆம்புலன்ஸ் வந்ததா என்றால் வரவில்லை. நான் மருத்துவமனைக்கு போவதற்கு முன்பு அண்ணாதுரை மருத்துவமனையில் சேர்ந்திருந்தாரா என்றால் இல்லை. போலீசார் விசாரணையிலும் நீதிமன்றத்தில் சொன்னதை தான் சொன்னேனா என்றால் சரிதான். நான் புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு போனேனா என்றால் இல்லை, நேராக மருத்துவமனைக்கு தான் போனேன். என்னோடு என் தங்கையும் மருத்துவமனைக்கு வந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லுவது **22.01.2024,** வழக்கு பதிவு செய்தது **30.01.2024** என்றாலும் சரிதான். எனக்கு கழி கட்டைக்கு வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். நான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில்

சிகிச்சையில் இருந்தபோது எத்தனை பேர் அடித்தார்கள் என்று மருத்துவரிடம் சொன்னேனா என்றால் இல்லை. நான் மருத்துவனையில் போய் சேர்ந்தபோதே மயக்கமாக இருந்தது. நான் எதிரிகளின் பெயரில் தொடர்ந்து புகார் கொடுத்து கொண்டே இருக்கிறேன் என்றால் ஆமாம், அவர்களும் கேஸ் கொடுக்கிறார்கள். நானும் என் கணவரும் குடியிருப்பது திருச்சி மாத்தூர் ரவுண்டானா என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும்போது அந்த இடம் எனக்கு சொந்தமானது என்பதற்கு ஆதாரம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்ற விவரத்தையும் சொன்னேன். 1ம் எதிரி வன்னியர் சாதியை சார்ந்தவரா என்றால் ஆமாம். அவரது மகன் தான் 2ம் எதிரி. என்னை போலீசார் விசாரித்தபோது 1ம் எதிரி வீட்டை விட்டு துரத்தவேண்டும் என்று கட்டையால் காலில் அடித்தார் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். 4ம் எதிரி என்னை அசிங்கமாக திட்டி துரத்திவிடுறேன் என்று சொன்னதாக போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என் அம்மாவை உதைத்துவிட்டதாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் புகார் கொடுக்கும்போது யார் யார் வந்து விலக்கிவிட்டார்கள் என்ற விவரத்தை சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். 22.01.2024 அன்று 1ம் எதிரியை நான் தான் அடித்து கீழே தள்ளிவிட்டேன் என்றாலும், அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு 24.01.2024 வரை சிகிச்சை பெற்று அங்கிருந்து அரியலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு 27.01.2024 அன்று டிஸ்சார்ச் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. அவரை தாக்கிவிட்டு தப்பிப்பதற்காக பொய்யா இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அவரை தாக்கிவிட்டு ஓடும் போது தான் கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை எதிரிகள் சாதியை பேரை சொல்லி திட்டவும் இல்லை, அடிக்கவும் இல்லை என்றாலும் சரியல்ல. 4ம் எதிரி இளையபெருமாள் நல்லூரை சார்ந்தவர். இளையபெருமாள்நல்லூருக்கும் எங்கள் ஊருக்கும் 4 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். 4ம் எதிரி எந்த வம்புக்கும் வரவில்லை என்றாலும், வேண்டுமென்றே அவர் மீது போட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 3 வரை எதிரிகள் ரெட்டிபாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்பில் தான் 50 வருடமாக குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

நான் திருச்சியில் எத்தனை வருடமாக குடியிருக்கிறேன் என்றால் திருச்சியிலும், ரெட்டி பாளையத்திலும் மாறி மாறி தான் இருப்போம், திருச்சியில் 30 வருடத்திற்கு முன்பாக போக ஆரம்பித்தேன். என் அம்மா மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் அதன் பிறகு எடுத்து கொண்டார். தஞ்சாவூரிர் மருத்துவம் செய்து கொண்டதற்கான ஆதாரங்கள் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சிகிச்சை முடித்து வந்த பிறகு தான் என் அம்மாவை சிகிச்சைக்கு அழைத்து போனேன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு நில தகராறு தான் முழு காரணம் என்றால் சரிதான். இது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக வழக்கு போட்டிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்தது உண்மை தான். எனக்கு வெளிப்புற காயங்கள் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.20/2024**

Prosecution Witness : **LW – 2 / PW -2**

Name : முத்தாயாள் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day 07.11.2025

(எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை

அ.சா.1 என் மகள். எனது சொந்த ஊர் ரெட்டிபாளையம். நான் இந்து பறையர் வகுப்பை சார்ந்தவர். ஆஜர் எதிரிகளை தெரியும். 1ம் எதிரி அண்ணாதுரை வன்னியர் சாதியை சார்ந்தவர். 1ம் மகன் தான் 2ம் எதிரி அன்புதுரை. 3ம், 4ம் எதிரிகள் இந்து பறையர் வகுப்பை சார்ந்தவர்கள். ரெட்டிபாளையத்தில் ஆலமரத்திற்கு மேற்குபுறம் உள்ள இடம் எங்களுக்கு சொந்தமான இடம். எனது தம்பி சுப்பிரமணியனுக்கு திருச்சியில் அரசு வேலை கிடைத்தது. வேலை கிடைத்தவுடன் எனது தம்பியும், அம்மாவும் திருச்சிக்கு சென்றுவிட்டார்கள். எனது மகள் ராஜேஸ்வரி எனது தம்பி சுப்பிரமணியனுக்கு திருமணம் செய்து கொடுத்தோம். எல்லாம் வெளியூரில் இருந்ததால் நான் பிறந்த ஊரான ரெட்டிபாளையத்தில் குடியிருந்து வந்தேன். போன வருடம் பொங்கல் முடிந்து 6ம் நாள் எனது மகள் ராஜேஸ்வரி முத்துசேர்வார்மடம் ரேசன் கடைக்கு போய் அரிசி வாங்கிகொண்டு காலை 11.00 மணிக்கு திரும்பி வந்தார். அப்போது அண்ணாதுரையும், அன்புதுரையும் புல் போதையில் வந்து கட்டைகழியை எடுத்து வந்து கதவை அடித்து எனது மகள் ராஜேஸ்வரியை காலில் அடித்துவிட்டார்கள். அவர்கள் அடிக்கும்போது

நான் கத்தினேன். பற தேவடியா, குச்சிக்காரி என்று அசிங்கமாக திட்டினார்கள். அப்போது அங்கு நிறைய பேர் இருந்தார்கள். அப்போது கண் ஆப்பரேசன் பண்ணியிருந்ததால் யார் யார் இருந்தார்கள் என்று சரியாக தெரியவில்லை. என்னையும் அண்ணாதுரை, அன்புதுரையும் நெஞ்சில் அடித்துவிட்டார்கள். நான் நெஞ்சு வலி வந்து கீழே விழுந்துவிட்டேன். நான் ஆட்டோவில் மீன்சுருட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். அப்போது மருத்துவமனையில் என் மகள் இருந்தார். பிறகு நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு போனோம். அங்கு போலீஸ் வந்து விசாரித்தார்கள். இது சம்மந்தமாக **DSP** பிறகு விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பிறந்த ஊர் ரெட்டிபாளையம் என்றால் சரிதான். என்னை திருமணம் செய்து கொடுத்தது கோடாலிகருப்பூர் ஆயிபாளையம் என்றால் சரிதான். முத்துசசேர்வாமடம் கிராமத்திற்கும் ஆயிபாளைம் கிராமத்திற்கும் 30 கிமீ தூரம் இருக்குமா என்றால் அது எனக்கு தெரியாது. 1 முதல் 3 எதிரிகள் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் தான் குடியிருக்கிறார்கள். என் வீட்டிற்கு தெற்கில் எதிரிகள் வீடு உள்ளது. என் மகளுக்கும் எதிரிகளுக்கும் ஜெயங்கொண்டம் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு உள்ளது என்றால் ஆமாம். நானும் என் மகளும் மீன்சுருட்டி காவல் நிலையத்தில் எதிரிகள் மீது நிறைய தடவை புகார் கொடுத்திருக்கிறோம் என்றால் ஆமாம், அவர்கள் தகராறு செய்ததால் புகார் கொடுத்தோம். இடம் சம்மந்தமாக எங்களுக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருக்கிறதா என்றால் ஆமாம், 15 வருடத்திற்கு மேலாக பிரச்சனை இருக்கிறது. எனது மகள் திருச்சியில் எத்தனை வருடம் குடியிருக்கிறார் என்றால் திருமணம் செய்து கொடுத்ததில் இருந்து திருச்சியில் இருக்கிறார், அவ்வப்போது ஊருக்கு வந்து போகும். சம்பவம்

நடந்ததாக சொல்லும் தேதியில் என் மகள் ரேசன் கடைக்கு சென்று வந்தார், எங்கள் வீட்டிற்கும் ரேசன் கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கிமீ இருக்கும். எங்கள் தெருவில் நிறைய பேர் இருந்தார்களா என்றால் அங்கு தெருவே கிடையாது. சம்பவம் நடந்த இடத்தில் எங்கள் வீடும், எதிரிகள் வீடு மற்றும் வேறு ஒரு வீடு தான் உள்ளது. நான், அ.சா.1, எனது மற்றொரு மகள் ஆகியோர் மீன்சுருட்டி ஆஸ்பத்திரிக்கு போய்விட்டு பிறகு தான் ஜெயங்கொண்டம் மருத்துவமனைக்கு போனோம். நானும் அ.சா.1ம் ஒரே வாகனத்தில் தான் ஜெயங்கொண்டம் மருத்துவமனைக்கு போனோமா என்றால் ஆமாம். நாங்கள் மருத்துவமனைக்கு போனபோது அங்கு 1ம் எதிரி அண்ணாதுரை சிகிச்சையில் இருந்தாரா என்றால் அது எங்களுக்கு தெரியாது. என்னை போலீசார் எத்தனை நாள் கழித்து விசாரித்தார்கள் என்றால் போலீசார் வந்து விசாரித்து கொண்டு தான் இருந்தார்கள், நாங்களும் காவல் நிலையத்திற்கு போய் கொண்டு தான் இருந்தோம். சம்பவம் நடந்த உடன் ரெட்டிபாளையத்திற்கு போலீசார் வந்து விசாரித்தார்களா என்றால் ஆமாம் விசாரித்தார்கள். நான் ஜெயங்கொண்டம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேனா என்றால் ஆமாம். எனக்கு கட்டைக்கும் கழிக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். என்னை போலீசார் விசாரித்தபோது அண்ணாதுரையும், அன்புதுரையும் என்னை கட்டையால் அடித்தது பற்றி சொன்னேனா என்றால் சொன்னேன். அந்த கட்டையையும் கழியையும் கூட நான் போலீசாரிடம் காட்டினேன். போலீசாரிடம் எதிரிகள் கதவை அடித்து உடைத்துவிட்டதாக சொன்னேனா என்றால் சொன்னேன். என்னை அண்ணாதுரையும், அன்புதுரையும் தாக்கினார்கள் என்று போலீசிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு கண் ஆப்ரேசன் செய்தது எப்போது என்றால் சம்பத்திற்கு ஒரு 3 மாதத்திற்கு முன்பு. கண் ஆபரேசன் பண்ணியிருந்ததால் மதிய வெயில் நேரத்தில் யார் என்ன என்று சரியாக பார்க்க

முடியாது என்றால் ஆமாம். அதனால் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என் மகளுக்கும் எனக்கும் எதிரிகளுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணம் என்பதால் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு கொடுத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரி என்னையோ என் மகளயோ அடிக்கவில்லை என்றாலும், திட்டவில்லை என்றாலும் சரியல்ல. போலீஸ் விசாரிக்கும்போது 1, 2 எதிரிகள் மது அருந்தியிருந்தார்கள் என்று சொன்னேனா என்றால் அதையும் சொன்னேன். 2ம் எதிரி திருப்பூரில் வேலை பார்த்து கொண்டிருந்தாரா என்றால் எனக்கு அவர் வேலை பார்ப்பது பற்றி தெரியாது. இட பிரச்சனையை முன்வைத்து எதிரிகளை பழி வாங்க எதிரிகள் மீது பொய் சாட்சியம் கொடுத்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை–** இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.